செய்தி வெளியீடு எண்.307 நாள்: 18.08.2021

**திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்த்தும் திட்டத்தின் கீழ், நகர்ப்புற படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இத்திட்டத்தின் கீழ், திறன் வளர்ப்பு பயிற்சிகள் 2021-22-ம் ஆண்டிற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் Automotive, IT–ITES, Handloom, Leather, Logistics நடத்துவதற்கு உரிய நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகிறது.

திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்கள் தேசிய திறன் வளர்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பிரதமர் கௌசல் கேந்திரா பயிற்சி மையங்களை கொண்ட திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விதிமுறைகளின்படி, அரசு மூலம் வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் ஊதியத்துடன் வேலைவாய்ப்பு, பயிற்சி முடித்தமைக்கான முன் அனுபவம் இருக்க வேண்டும். உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

தகுதியான திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்கள், தங்களது கருத்துருக்களை திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வளாகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் 25.08.2021-ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.